**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்**
**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG**
**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG**

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 22-2020*

அன்னை தமிழ்முற்றக்குழுவினர்களால் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்ட இணையவழி "திருக்குறள் ஒப்பித்தல்" நிகழ்ச்சியில் பங்குகொண்டு எமது வளாகத்திற்குப் பெருமை சேர்த்த மாணவச்செல்வங்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ஒத்துழைப்புத்தந்த பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

## கல்வி

கற்பித்தல் வழமை போன்று ''Teams'' இணையத்தளக் கல்விப்பகுதியில் மாத்திரம் நடைபெறும்.
*''Teams'' இல் பதிவுசெய்வதில் சிரமம் இருப்பவர்கள் விரைவில் எம்மோடு தொடர்புகொள்ளவும்.*

## ஆண்டிறுதித்தேர்வு 2020

*எழுத்துத்தேர்வு/மதிப்பீடு*

1-9 ஆம் வகுப்பினருக்கு இணையவழி மூலம் 06.06.2020 பாடசாலை நேரத்தில் நடைபெறும்
10ஆம் வகுப்புக்கான பரீட்சை தமிழர் வள ஆலோசனைமைத்தில் 07.06.2020 நடைபெறும். நேரவிபரம் பின்பு அறியத்தரப்படும்.

## நிதி

அன்னையினால் அறவிடப்பட்ட கட்டணங்களை இன்னும் செலுத்தாதவர்கள் விரைவில் செலுத்துவதனால் தேவையில்லாத மேலதிக கட்டணங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

## பெற்றோர்கூட்டம் 30.05.2020 நேரம்:12:50-14:20.

12:45 மணியளவில் தங்கள் பிள்ளைகளில் ஒருவரின் இணையவழியூடாக நாம் பெற்றோரை இணைக்கவுள்ளோம். எனவே தங்கள் பிள்ளைகளின் இணையவழி மின்னஞ்சல்களைக் கவனித்து இணைந்துகொள்ளுங்கள்.
இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு

TBUK வினர் செயலில் உள்ள அங்கத்தவர்களாக (Aktiv medlemmer-ஆக) எமது மாணவர்களையும் பதியும்படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றனர்.
மேலதிக விபரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும். கட்டணத்தொகை ஒருவருக்கு 100குரோணர்கள்.

## ஒன்றுகூடல் 2020

கோடைகால விடுமுறை முடிந்து அடுத்துவரும் கல்வியாண்டின் ஆரம்பத்தில் (அன்றைய சூழ்நிலையைப்பொறுத்து) ஒன்றுகூடல் ஒன்றை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். எப்போது?எங்கே?எவ்வாறு? என்ற விபரத்தினை முடிவுசெய்தவுடன் அறியத்தருவோம். அதற்கு முன்பு ஆசிரியர்களுடன் சேர்ந்து வகுப்புரீதியாக ஒன்றுகூடலை நடாத்த அல்லது பங்குகொள்ள எண்ணினால் நோர்வே சுகாதார அமைப்பினதும் அன்னையினதும் இது சம்மந்தமான சட்டதிட்டங்களை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துதல் அவசியமானது.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**

**தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!**

# பெற்றோர்கூட்டம்

திகதி: 30.05.2020 நாள்: சனிக்கிழமை

நேரம்: 12:50 – 14:20 (ஆகக்கூடியது 14:30)

இடம்: TEAMS-இணையவழி

விடயங்கள்:

- வணக்கம் வரவேற்பு
- கல்வி-தேர்வு-மதிப்பீடு
- பாடசாலை-விடுமுறையும் வளாக/வகுப்பறை ஒன்றுகூடலும்.
- கட்டணத்தெகை குறைப்பு - உதவித்தொகை அதிகரிப்பு.
- விளையாட்டுப்போட்டி-அங்கத்துவம்(TBUK).
- கலைப்பாடம்
- ஆண்டுக்கூட்டம் 2020
- அடுத்த கல்வியாண்டு-கல்விமுறை-இணையவழி/TRVS?
- இதரவிடையம்

இங்ஙனம்

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்